PERMANENT REFERENCE

# இலங்கையில் தேசியக் கல்வி விருத்திக்குத் தமிழரின் பங்களிப்பு (1841 - 1931)

320.954933
SRI
(PR)

ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
பி. ஏ பட்டப்பின் கல்விடிப்புளோமா

LIBRARY
25 SEP 2006
Eastern University, Sri Lanka.

முதுதத்துவமாணி (கல்வி) ப்பட்டத்திற்கான பகுதித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டுச் சமர்ப்பிக்கப் பட்டுள்ள ஆய்வுக் கட்டுரை.

DONATIONS
This book / journal was donated by
63352
to the Library,
Eastern University, Sri Lanka.
on
ExM.Phil15
Thesis
Library - EUSL

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
2000.

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

"இலங்கையில் தேசியக் கல்வி விருத்திக்குத் தமிழரின் பங்களிப்பு" என்பது பற்றி, கி.பி 1840 முதல் 1930 வரையிலான காலப்பகுதியை எல்லையாகக் கொண்டு ஆய்வு செய்வதே, இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இது ஐந்து இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது.

முதலாவது இயலானது இலங்கையின் தேசியக்கல்வி பற்றிய அறிமுகத்தைச் செய்வதாக அமைந்துள்ளது. தேசியம், தேசியத்துவம் பற்றிய எண்ணக்கருக்கள், தேசியமும் இலங்கையும், இலங்கையில் தேசியக்கல்வி, இலங்கையின் இந்துக்கல்வி மரபு, சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையின் கல்விநிலை ஆகிய விடயங்கள் அதில் இடம் பெற்றுள்ளன.

இரண்டாவது இயலானது, இலங்கைத் தேசியக்கல்வி வளர்ச்சியில் ஆறுமுகநாவலரதும் அவரது மரபினரதும் பங்களிப்புகள் பற்றி எடுத்துக் கூறுகின்றது. மேலும், ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் தேசிய நோக்கு, ஆறுமுகநாவலரின் கல்விப்பணி, பாடசாலைகள் அமைத்தபணி, ஆசிரியப்பணி, பதிப்பாசிரிய-பிரசங்கப்பணிகள் போன்றவை தேசியக்கல்விக்கு உதவியமையும், நாவலரது நேரடி மாணாக்கர்களின் கல்விசார் பங்களிப்புகள் போன்றவையும் இவ்வியலில் உள்ளடக்கிக் காணப்படுகின்றன.

மூன்றாவது இயலானது, இலங்கையின் தேசியக்கல்வி வளர்ச்சிக்கு நாவலருக்குப் பின்னர் வந்த தமிழர்களில், தலைப்பட்டவர்களின் பங்களிப்பு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதனூடாக அரசியற் பங்களிப்பு கல்விச் சிந்தனைகளும், செயற்பாடுகளும், இலவசக்கல்வியும் தாய்மொழிக்கல்வியும், கல்விக்கூடங்கள் அமைத்தல், கலைத்திட்டச் செயற்பாடுகள், பல்கலைக்கழகக்கல்வி போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

நான்காவது இயலானது, இலங்கையின் தேசியக் கல்வி வளர்ச்சிக்குத் தமிழர் சார்பான நிறுவனங்களின் பங்களிப்புப் பற்றிக் கூறுகின்றது. அதில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை பற்றியும் அதன் பாடசாலை அமைத்தலும் நிர்வகித்தலும் ஆகிய பணி, பத்திரிகைப்பணி, பிரசுரப்பணி போன்றவை பற்றியும் எடுத்துநோக்கப்பட்டுள்ளது. அத்துடன், சைவவித்தியாவிருத்திச் சங்கம், இந்துக் கல்லூரி அதிகாரசபை, இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்த சபை, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகளும் ஆய்வுசெய்யப்பட்டுள்ளன.

ஐந்தாவது இயல் முந்திய நான்கு இயல்களிலும் கூறிய விடயங்களை மதிப்பீடு செய்வதாக அமைந்துள்ளது, அவற்றில் தேசியக்கல்விக் கொள்கைகள், இலவசக்கல்வி, கட்டாயக்கல்வி, தாய்மொழிக்கல்வி, உயர்கல்வி, பாடசாலை அமைப்பு, கலைத்திட்ட வளர்ச்சி போன்ற அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆய்வுக்களம்:-

இலங்கையின் கல்விப்பாரம்பரியம் நீண்டதும், அறாத்தொடர்பு உடையதும் ஆகும். இதில் கி.பி. 1841 முதல் 1931 வரையுள்ள பகுதியையே இந்த ஆய்வுக்கட்டுரைக்கான களமாகக் கொள்ளப்பட்டுள்ளது. அக்காலப் பகுதியில் தமிழர்கள் தேசியக்கல்விக்கு ஆற்றிய பணிகள், பங்களிப்புகள் பற்றியே இங்கு ஆதார பூர்வமாக எடுத்துக்காட்டப்படுகிறது.

ஆய்வுமுறை:-

இவ்வாய்வுக் கட்டுரையானது ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாய்வு முழுமை பெறுவதற்குத் தேடல் முறையிலான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## பொருளடக்கம்
**********


| | பக்க இல |
|---|---|
| ஆய்வாளரின் உறுதியுரை | I |
| மேற்பார்வையாளரின் உறுதியுரை | II |
| ஆய்வுச்சுருக்கம் | III |
| நன்றியுரை | VI |
| * இயல் - ஒன்று - "இலங்கையின் தேசியக்கல்வி ஓர் அறிமுகம்" | 01 |
| * இயல் - இரண்டு- "இலங்கைத்தேசியக்கல்வி வளர்ச்சியில் ஆறுமுகநாவலரதும் அவரது மரபினரதும் பங்களிப்புக்கள்" | 31 |
| * இயல் - மூன்று- "இலங்கையின் தேசியிக்கல்வி வளர்ச்சிக்கு நாவலருக்கு பின்னர் வந்த தமிழர்களில் தனிப்பட்டவர்களின் பங்களிப்பு" | 86 |
| * இயல் -நான்கு- "இலங்கையின் தேசியக்கல்வி வளர்ச்சிக்கு தமிழர் சார்பான நிறுவனங்களின் பங்களிப்பு" | 133 |
| * இயல்- ஐந்து - "மதிப்பீடு" | 175 |
| பின்னிணைப்புக்கள் | 207 |
| நூல்விபரப்பட்டியல் | 214 |


- * * * * * -